தொண்டமானாறு தனு வெளியீட்டகம்
THONDAMANARU THANU PUBLICATIONS

முதலாம் தவணைப் பரீட்சை - 2024

தரம் 8 | **புவியியல்** | **இரண்டு மணித்தியாலங்கள்**

பகுதி I

❖ **பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1. ஞாயிற்றுத் தொகுதியில் முதன்மையானதாகக் கருதப்படுவது
   (1) சந்திரன் (2) செவ்வாய் (3) சூரியன் (4) பூமி

2. தூமகேது எனப்படும் வான்பொருள்
   (1) வால்வெள்ளி (2) ஆகாய எரிகற்கள் (3) குறுங்கோள் (4) வெள்ளிக்கோள்

3. செவ்வாய் என்ற கோள் தொடர்பான தவறான கூற்று
   (1) செங்கோள் என அழைக்கப்படும் (2) அகக்கோள்களில் ஒன்று
   (3) இரு உபகோள்களைக் கொண்டது (4) புறக்கோள்களில் ஒன்று

4. புவியின் உபகோள்களின் எண்ணிக்கை
   (1) 2 ஆகும் (2) 1 ஆகும் (3) 5 ஆகும் (4) 25 ஆகும்

5. புறக்கோள்களில் முதலாவதாக அமைந்துள்ள கோள்
   (1) யுரேனஸ் (2) புதன் (3) வியாழன் (4) சனி

6. சனி என்ற கோள் தொடர்பான சரியான கூற்று
   (1) 82 உபகோள்களைக் கொண்டுள்ளது
   (2) ஞாயிற்றுத் தொகுதியிலுள்ள மிகப்பெரிய கோள் ஆகும்
   (3) புவியைப் போன்று இரண்டு மடங்கு பெரியது
   (4) சூரியனில் இருந்து ஆறாவது இடத்தில் அமைந்துள்ளது

7. நெப்ரியூன் என்ற கோள் எந்நிறத்தில் காட்சியளிக்கும்?
   (1) நீலம் (2) வெள்ளை (3) கறுப்பு (4) சிவப்பு

8. புளூட்டோ, எரிஸ் என்பன எவ்வாறான வான்பொருட்கள்
   (1) உபகோள்கள் (2) சிறுகோள்கள் (3) கோள்கள் (4) உடுப்போலிகள்

9. புத்தாண்டுடன் தொடர்புடைய இனத்தவர்கள்
   (1) சிங்களவர், முஸ்லீம்கள் (2) சிங்களவர், பறங்கியர்
   (3) முஸ்லீம்கள், தமிழர் (4) தமிழர், சிங்களவர்

www.lkedu.lk

zoom Online
வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை




" தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் "

PRIMARY

- தமிழ்
- கணிதம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- பேச்சு சிங்களம்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் | தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன

76667-4945

10. கலிலியோ கலிலி என்ற கண்டுபிடிப்பாளருடன் தொடர்பான சரியான விடையாக அமைவது
(1) இத்தாலி – தொலைகாட்டி (2) ஜேர்மனி – தொலைகாட்டி
(3) இத்தாலி – தொலைக்காட்சி (4) இங்கிலாந்து – தொலைக்காட்சி

11. கி.பி 1957 இல் செயற்கைக்கோளை விண்ணுக்கு அனுப்பிய நாடு
(1) அமெரிக்கா (2) ரஷ்யா (3) இந்தியா (4) சீனா

12. அமெரிக்க நாட்டின் விண்வெளி ஆய்வு மையத்தின் பெயர்
(1) KGB (2) UNDP (3) NASA (4) WFP

13. சர்வதேச வானியல் நிறுவனத்தால் புளூட்டோ என்பதனை ஒரு குறுங்கோள் என பிரகடனப்படுத்திய வருடம்
(1) கி.பி 1985 (2) கி.பி 2000 (3) கி.பி 2016 (4) கி.பி 2006

14. நாம் வாழும் புவியின் வடிவம் யாது?
(1) வட்டம் (2) கோளம் (3) நீள்வட்டம் (4) தட்டை

15. புவியின் மத்திய கோட்டு விட்டம் முனைவு விட்டத்தை விட எத்தனை கி.மீ அதிகமாகும்?
(1) 42 கி.மீ (2) 128 கி.மீ (3) 80 கி.மீ (4) 22 கி.மீ

16. புவியில் கற்பனையாக வரையப்பட்டுள்ள 0^0 அகலக்கோடு எது?
(1) கடகக்கோடு (2) மகரக்கோடு (3) மத்தியகோடு (4) கிறீன்விச்கோடு

17. பூமியில் காணப்படும் கற்பனையான நெடுங்கோடுகளின் எண்ணிக்கை
(1) 360 கோடுகள் (2) 181 கோடுகள் (3) 361 கோடுகள் (4) 180 கோடுகள்

18. புவிச்சுழற்சி நடைபெறும் திசைகளில் பொருத்தமான விடை
(1) வடக்கிலிருந்து தெற்காக (2) கிழக்கிலிருந்து மேற்காக
(3) மேற்கிலிருந்து கிழக்காக (4) தெற்கிலிருந்து வடக்காக

19. கிறீன்விச் நகரத்தின் நேரம் நண்பகல் 12.00 மணியாக உள்ள போது சர்வதேச திகதிக்கோட்டின் நேரம் யாது?
(1) நண்பகல் 1.00 மணி (2) மு.ப. 6.00 மணி
(3) பி.பி. 6.00 மணி (4) நள்ளிரவு 12.00 மணி

20. Astrology என்ற கலைச்சொல்லின் தமிழ் அர்த்தம்
(1) வானசாஸ்திரம் (2) ஈர்ப்புவிசை (3) சுற்றுகை (4) திணிவு

(20×2 = 40 புள்ளிகள்)

www.ikedu.lk

பகுதி II

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. அ) ஞாயிற்றுத்தொகுதியிலுள்ள புறக்கோள்கள் இரண்டினைக் கூறுக.

ஆ) சூரியன் தொடர்பான விசேட அம்சங்கள் இரண்டினைக் கூறுக.

இ) பின்வரும் தகவல்களுடன் தொடர்பான கோள்களைக் குறிப்பிடுக.

A- சூரியனுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளமை

B- கிழக்கிலிருந்து மேற்காகச் சுழல்தல்

C- சந்திரனென்ற ஒரேயொரு உபகோளைக் கொண்டிருத்தல்

D- சூரியனிலிருந்து நான்காவது இடத்தில் அமைந்துள்ளது

E- மிக உயர்ந்த ஈர்ப்பு சக்தியைக் கொண்டுள்ள கோள்

F- அழகான ஒளிவளையங்களைக் கொண்டிருத்தல்

(2+4+6 = 12 புள்ளிகள்)

2. அ) நெப்ரியூன் என்ற கோளின் நிறம், அதன் உபகோள்களின் எண்ணிக்கை என்பவற்றைக் கூறுக.

ஆ) பின்வரும் கோள்களின் உபகோள்களின் எண்ணிக்கை யாது?

A- வெள்ளி

B- வியாழன்

C- சனி

D- யுரேனஸ்

இ) பின்வருவன பற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.

A- சிறுகோள்கள்

B- உபகோள்கள்

C- குறுங்கோள்கள்

(2+4+6 = 12 புள்ளிகள்)

3. அ) எமது நாட்டில் கொண்டாடப்படும் பின்வரும் பண்டிகைகளுடன் தொடர்பான சமயங்களைக் குறிப்பிடுக.

A – தைப்பொங்கல்

B – றம்ழான்

ஆ) ஆரம்ப காலத்தில் விண்வெளி தொடர்பான தகவல்களைக் கண்டுபிடிப்பதில் கலிலியோ கலிலியைப் போன்று ஆர்வம் காட்டிய நான்கு அறிஞர்களைக் குறிப்பிடுக.

இ) ஞாயிற்றுத் தொகுதியுடன் தொடர்பான நம்பிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2+4+6 = 12 புள்ளிகள்)

4. அ) புவிச்சுழற்சிக்கு எடுக்கும் நாட்கள், புவி அச்சின் சரிவின் அளவு என்பவற்றைக் குறிப்பிடுக.

ஆ) புவியின் சுழற்சி காரணமாக நடைபெறுகின்ற இரு நிகழ்வுகளைக் குறிப்பிடுக.


இ) புவியில் உயிர்கள் வாழ்வதற்காகக் காணப்படும் சாதகமான சூழ்நிலைகள் மூன்றினைக் கூறுக.

(2+4+6 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk

5. அ) புவிச்சுற்றுகை என்றால் என்ன?

ஆ) தரப்பட்டுள்ள மாதிரிப் பூகோளத்தில் காணப்படும் அகல, நெடுங்கோடுகளைப் பெயரிடுக.



இ) பின்வருவன தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

A- அகலக்கோடுகள்

B- நெடுங்கோடுகள்

C- கிறீன்விச் கோடு

(2+4+6 = 12 புள்ளிகள்)

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu